**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 533/2019 P.W. 6 Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜகுமார் (தலைமை காவலர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. கனகப்பன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **04.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் ஆஜர்**

1. நான் தற்பொழுது தக்கலை காவல் நிலையத்தில் தலைமை காவலளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் சிறப்பு உதவிய ஆய்வாளராக பணிபுரிந்த பிரபாகுமார் காவல் உதவி ஆய்வாளர் இசக்கி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ரமேஷ் ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 31.03.2019 ம் தேதி 16.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவிய ஆய்வாளராக பணிபுரிந்த பிரபாகுமார் என்பவரிடம் செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 194/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 452, 427, 506(1) இதச–ன் மற்றும் 4 of TNWH Act ன் படி வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் இசக்கி அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.03.2019ம் தேதி 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் இலுக்கையன் மற்றும் சூரியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 5 மற்றும் பார்வை மகசர் அ.த.சா.ஆ. 6 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார். மேலும்

வழக்கு சம்பவ இடத்தில் இருந்து இவ்வழக்கின் தடய பொருட்களான உடைந்த பிளாஸ்டிக் சேர் துண்டுகள் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றி படிவம் 91 ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 452, 427, 506(1) இதச–ன் மற்றும் 4 of TNWH Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

இந்த வழக்கு விசாரணை குறித்து எனக்கு எந்த விவரமும் நேரயாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பதியப்பட்ட வழக்கில் சம்பவம் இடம் செல்லமாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.